OS.No. 134/2022

Dated : 18.06.2024

Time: 12.25 p.m to 12.40 p.m

P.W-1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

**1** முதல் **3** பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணை

1) சொத்து வேண்டும் என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண். 151/1 விஸ்தீரணம் 54 செண்ட் க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதன் விஸ்தீரணம் 1.19 ஏக்கர். மேற்படி விவரத்தை நான் முற்றிலும் தவறாக சொல்கிறேன் என்றும் அதன் மொத்த விஸ்தீரணம் 0.88.5 ஹெக்டேர் என்றும் அதன் வீஸ்தீரணம் 2.17 ஏக்கர் என்றால் நான் 54 செண்ட்க்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2) அதே போல் சர்வே எண். 152/2 அதன் விஸ்தீரணம் 4.20 ஏக்கர் ஆகும். அந்த சொத்தில் கூட்டு பங்குதார்கள் யார் யார் என்று சொன்னால் ஆண்டி, மூப்பன், வெள்ளையன் ஆவார்கள். அதில் அவர்களுக்கு குறிப்பிட்டு என்ன பாகம் என்று தெரியாது. அதே போல் சர்வே எண். 151/1 கூட்டு பங்குதார்கள் யார் யார் என்று சொன்னால் வடமலை கவுண்டர், லட்சுமணன் அவருடைய மகன், சின்னதம்பி மற்றும் ராமகவுண்டர் மகன்களான சின்னதம்பி, குள்ளன் பங்குதாரர்கள் ஆவார்கள்.அதில் அவர்களுக்கு எவ்வளவு பாகம் என்றால் தலா 54 செண்ட் பாகம்.

3) சின்னயன் மகன்கள் தான் வடமலை மற்றும் ராமன். அந்த வடமலையின் மகன் லட்சுமணன் மற்றும் சின்னதம்பி (1ம் பிரதிவாதி). 1ம் பிரதிவாதியின் மகன் தான் 2, 3 பிரதிவாதிகள். அதே போல் ராமனுக்கு லட்சுமணன், சின்னதம்பி மற்றும் குள்ளன் என்றால் அது தவறு லட்சுமணன் ராமனின் மகன் இல்லை. லட்சுமணன் ராமனின் மகன்தான் என்றும் அதனால் தான் ராமனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை நான் வழக்கில் முன்நிறுத்தவில்லை என்றால் அது தவறு. மேற்படி சர்வே எண் 151/1 ல் வடமலை வாரிசுகளும் ராமனின் வாரிசுகளும் இது வரை பாகம் செய்து கொள்ளவில்லை என்றால் அது தவறு பாகம் செய்து கொண்டார்கள்.

4) அது எந்த ஆவணத்தின் அடிப்படையில் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதே போல் சர்வே எண். 151/1 ல் மொத்தம் 8 கூட்டு பட்டா மற்றும் பங்குதார்களாக உள்ளார் என்றால் அப்படி ஒன்றும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ல் மேற்படி 8 கூட்டு பட்டாதார்கள் பங்கு உள்ளது என்றும் எனவே நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் 152/2 லும் 19 பேர் கூட்டு பட்டாதார்கள் என்றும் அது வா.சா.ஆ.3 ல் உள்ளது என்றால் அது தவறு. மேற்படி கூட்டுப்பங்குதார்களை நான் இவ்வழக்கில் பங்குதார்களாக சேர்க்கததால் இவ்வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் தவறு.

(தரப்பினர்களின் வேண்டுக்கொள்ளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. )

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/-K.Ananthan
**Subordinate Judge,**
**Attur.**